தமிழக ஆரம்பப் பள்ளி ஆசிரியர் கூட்டணி ஒருங்கிணைந்த மாநாட்டை வனத்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி துவக்கி வைத்தார். பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி சிறப்புரை ஆற்றினார். மாவட்ட பொறுப்பாளர் டாக்டர். பொன்.கௌதமசிகாமணி , சட்டமன்ற உறுப்பினர்கள் அன்னியூர் அ.சிவா , டாக்டர் இரா.இலட்சுமணன், மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் ம.ஜெயசந்திரன், மாவட்ட பொருளாளர் இரா.ஜனகராஜ், மாநில ஆதிதிராவிடர் நலக்குழு இணைச் செயலாளர் செ.புஷ்பராஜ், மாவட்ட துணை செயலாளர் தயா.இளந்திரையன் , தமிழக ஆரம்பப்பள்ளி ஆசிரியர் கூட்டணி. நிர்வாகிகள். மாநில பொதுச் செயலாளர் இரா.தாஸ், மாநில தலைவர்ஆ.லட்சுமிபதி, மாநிலப் பொருளாளர் பி.தியாகராஜன், கள்ளக்குறிச்சி மாவட்டச் செயலாளர் சு.ரமேஷ், விழுப்புரம் மாவட்ட கட்டிட செயலாளர் தே.ஜெயானந்தம், விழுப்புரம் மாவட்டச் செயலாளர் அறிவழகன் மற்றும் ஆசிரியர் பெருமக்கள் பலர் கலந்து கொண்டனர்.

வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தலைமையில் கிண்டி அறிவியல் நகரத்தில் நேற்று முன்தினம் (19.11.2024) மின்னணுபயிர் சாகுபடி கணக்கீடு தொடர்பான ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு முதன்மைச் செயலாளர் செல்வி. அபூர்வா, வேளாண்மை இயக்குநர் பி. முருகேஷ், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநர் பி. குமரவேல் பாண்டியன். வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறை ஆணையர் கோ.பிரகாஷ், சர்க்கரைத் துறை இயக்குநர் டி. அன்பழகன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்

அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தலைமையில்

மின்னணு பயிர் சாகுபடி கணக்கீடு தொடர்பான ஆய்வுக் கூட்டம்!

கிண்டி அறிவியல் நகரத்தில் நடைபெற்றது!

சென்னை, நவ.21- வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர் செல்வம் தலைமையில் கிண்டி அறிவியல் நகரத்தில் நேற்று முன்தினம் (19.11.2024) மின்னணு பயிர் சாகுபடி கணக்கீடு தொடர்பான ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

தமிழ்நாட்டில் கடந்த 2022-23 முதல் வேளாண் அடுக்கு (Agri Stack) திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. வேளாண் அடுக்கில் விவசாயிகள் பதிவு மின்னணு பயிர் சாகுபடி கணக்கீடு, கிராமம் மற்றும் நிலங்களுக்கான புவியிடக் குறியீடு வழங்குதல் போன்ற பணிகள் செயல்படுத்தப்பட்டுள்ளன.

இதில், மின்னணு பயிர் சாகுபடி கணக்கீடு பரிசோதனை முறையில் தமிழ்நாட்டில் உள்ள 110 கிராமங்களில் காரிப் (Kharif) பருவத்தில் நடத்தப்பட்டது. பின்னர், தமிழகத்தில் உள்ள அனைத்து கிராமங்களில் உள்ள ராபி (Rabi) 2023 பருவத்திலும் காரிப் (Kharif) 2024 பருவத்திலும் வருவாய் துறை மூலம் கணக்கீடு செய்யப்பட்டது. ஆனால், இக்கணக்கீடு முழுமையாக நடத்தப்படவில்லை.

மின்னணு முறையில் விவசாயிகள் தரவு மற்றும் அவர்களின் நிலங்களில் சாகுபடி செய்யப்பட்டுள்ள பயிர் குறித்த விவரங்கள் பராமரிக்கப்படுவதால் விவசாயிகள் வேளாண்மை மற்றும் அதைச் சார்ந்த துறைகளின் நலத்திட்டங்களை பெறுவதற்கு ஒவ்வொரு முறையும், இவ்விவரங்களை பெற்று சம்பந்தப்பட்ட துறைகளுக்கு வழங்குவதிலிருந்து தவிர்ப்பதே வேளாண் அடுக்குத் திட்டத்தின் மிக முக்கிய நோக்கமாகும்.

மேலும் விவசாயிகள் வெகு சுலபமாக பயிர் கடன் மற்றும் இதர கடன்களை பெறுவதற்கு வங்கிகள் வேளாண் அடுக்கில் (Agri Stack) சேகரிக்கப்பட்ட மின்னணு தரவுகளின் அடிப்படையில் கடன் வழங்குவதற்கு உதவி புரியும்.

மின்னணு பயிர் சாகுபடி கணக்கீட்டினை முழுமையாக முடிக்கும் பட்சத்தில் மட்டும்தான் மின்னணு தரவுகளை அரசு துறைகள் மற்றும் வங்கிகளுக்கு வழங்கிட முடியும். வேளாண்மைத்துறை நடப்பு ராபி (Rabi) பருவத்தில் சாகுபடி செய்யப்பட்டுள்ள பயிர்களின் விவரங்களை விடுபாடின்றி முழுமையாக சேகரித்திட முடிவு செய்து தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தின் கட்டுப்பாட்டில் உள்ள வேளாண்மை, தோட்டக்கலை, வேளாண் பொறியியல் கல்லூரிகள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட வேளாண்மை கல்லூரிகளின் மாணவர்களையும் இக்கணக்கீட்டில் வேளாண்மைத்துறை அலுவலர்களுடன் சேர்த்துக்கொள்ள முடிவு செய்து 23,000 மாணவ - மாணவியரையும் 7000க்கும் அதிகமான வேளாண்மைத்துறை அலுவலர்கள்/பணியாளர்களைக் கொண்டு கடந்த 06.11.2024 முதல் கணக்கீட்டு பணி நடைபெற்று வருகின்றது.

இதுவரை 2.5 கோடிக்கு கூடுதலான நிலங்கள் கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. இப்பணியில் ஈடுபட்டுள்ள மாணவ - மாணவியரை கல்லூரிகளில் இருந்து அழைத்து வருவதற்கு பேருந்து வசதியும், காலை, மதிய உணவு வசதி மற்றும் தங்குவதற்கான இட வசதியும் வேளாண்மைத்துறையால் செய்து கொடுக்கப்பட்டுள்ளது.

மாணவ-மாணவியருக்கு இந்த கணக்கீட்டு சாகுபடி செய்யப்படும் பயிர்களை பற்றியும், அவற்றின் வளர்ச்சி பருவங்களை அறிந்து கொள்வதற்கும் களப்பயிற்சியாக அமைந்துள்ளது. மாணவ - மாணவியர் மிகுந்த ஆர்வத்துடன் மின்னணு பயிர் கணக்கீட்டு சாகுபடியில் கலந்து கொண்டுள்ளனர். இவர்களுக்கு தொழில்நுட்ப ரீதியில் உதவி புரிவதற்கு வேளாண்மைத்துறை மற்றும் துறைச் சார்ந்த அலுவலர்கள் உடன் செல்கின்றனர்.

எனவே, நடப்பு ராபி (Rabi) பருவத்தில் சாகுபடி செய்யப்பட்டுள்ள பயிர்களை 100% கணக்கீடு செய்யப்படும். இதன் மூலம் மின்னணு முறையில் தகவல்கள் விவசாயிகளின் விருப்பத்தின் பேரில் இதர துறைகளுக்கு மற்றும் வங்கிகளுக்கு பகிர்ந்தளிக்கப்படும். இதனால் விவசாயிகள் எளிதில் பயிர் சாகுபடி விவரங்களை பெற வாய்பாகின்றது.

இக்கூட்டத்தில் வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு முதன்மைச் செயலாளர் செல்வி. அபூர்வா, வேளாண்மை இயக்குநர் பி.முருகேஷ், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநர் பி.குமரவேல் பாண்டியன், வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறை ஆணையர் கோ.பிரகாஷ், சர்க்கரைத் துறை இயக்குநர் டி.அன்பழகன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

இந்தியாவிலேயே பன்னாட்டு புத்தகத் திருவிழாவை மிகச் சிறந்த முறையில்

நடத்திக் காட்டிய ஒரே மாநில அரசு , நமது முதல்வர் தலைமையிலான திராவிட மாடல் அரசு! ஜன.16 முதல் 18 வரை

சென்னை வர்த்தக மையத்தில் - 'சென்னை பன்னாட்டு புத்தகத் திருவிழா'!

நூலக ஆர்வலர்களுக்கு கேடயம் வழங்கி - அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அறிவிப்பு!

சென்னை, அண்ணா நூற்றாண்டு நூலக கூட்டரங்கில் பள்ளிக்கல்வித் துறை பொது நூலக இயக்ககம் சார்பில் நேற்று முன்தினம் (19.11.2024) நடைபெற்ற "டாக்டர்.எஸ்.ஆர். அரங்கநாதன் விருது வழங்கும் விழா மற்றும் சென்னை பன்னாட்டு புத்தகத் திருவிழா (CIBF) 2025 அறிமுக விழாவில் பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி நூலகர்களுக்கு டாக்டர்.எஸ்.ஆர். அரங்கநாதன்" விருதுகளையும், சிறந்த நூலகங்கள் மற்றும் வாசகர் வட்டங்களுக்கு கேடயங்களையும் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் பள்ளிக் கல்வித் துறை அரசு செயலாளர் திருமதி சோ. மதுமதி. தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழக தலைவர் திண்டுக்கல் ஐ.லியோனி, பொது நூலக இயக்குநர் (மு.கூ.பொ) முனைவர் பொ.சங்கர், சென்னை மாநகர நூலக ஆணைக் குழுத் தலைவர் கவிஞர் மனுஷ்ய புத்திரன், நூலக ஆலோசனை குழு உறுப்பினர் கோபண்ணா, இணை இயக்குநர் சங்கர சரவணன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

சென்னை, நவ.21- சென்னைப் பன்னாட்டுப் புத்தகத் திருவிழா வருகிற 2025-ஆம் ஆண்டு ஜனவரி 16 முதல் 18 தேதி வரை சென்னை வர்த்தக மையத்தில் நடைபெறவுள்ளது.

பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி 39 நூலகர்களுக்கு டாக்டர். எஸ். ஆர்.அரங்கநாதன் விருதும், 29 நபர்களுக்கு மாநில அளவில் அதிக உறுப்பினர் சேர்த்தல், அதிக புரவலர்கள் சேர்த்தல், அதிக நன்கொடை சேர்த்தல் மற்றும் சிறப்பாக செயல்பட்ட நூலக ஆர்வலர்களுக்கு கேடயம் மற்றும் நற்சான்றிதழ்களை வழங்கினார்.

சென்னை, கோட்டூர்புரம், அண்ணா நூற்றாண்டு நூலக கூட்டரங்கில் நூலகர்களுக்கு டாக்டர்.எஸ்.ஆர். அரங்கநாதன் விருது வழங்கும் விழா மற்றும் சென்னை பன்னாட்டு புத்தகத் திருவிழா (CIBF) 2025 அறிமுக விழாவில் பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி கலந்துகொண்டு சென்னை பன்னாட்டுப் புத்தகத் திருவிழா வருகின்ற 2025ம் ஆண்டு ஜனவரி 16ஆம் தேதி முதல் 18 ஆம் தேதி வரை சென்னை வர்த்தக மையத்தில் நடத்தப்படும் என்பதை அறிவித்து, 2025 ம் ஆண்டு சென்னை பன்னாட்டுப் புத்தகத் திருவிழா 3ம் பதிப்பிற்கான சிறப்புக் காணொலியை வெளியிட்டு, மதிப்புறு விருந்தினரான இத்தாலியைச் சேர்ந்த போலோனியா குழந்தைகள் புத்தகக் கண்காட்சி நிறுவனத்தை அறிமுகம் செய்து வைத்தார்.

இவ்விழா பள்ளிக்கல்வித் துறைச் செயலாளர் திருமதி. சோ.மதுமதி தலைமையில் நடைபெற்றது.

தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத் தலைவர் திண்டுக்கல் ஐ.லியோனி, பொது நூலகத் துறை இயக்குநர் முனைவர். பொ. சங்கர் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

அதனைத் தொடர்ந்து, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, மாவட்ட நூலக அலுவலர்கள், கன்னிமாரா பொது நூலக நூலகர், அண்ணா நூற்றாண்டு நூலக முதன்மை நூலகர், கலைஞர் நூற்றாண்டு நூலக முதன்மை நூலகர், மாவட்ட நூலகர்கள் என மொத்தம் 38 நபர்களுக்கு கையடக்க கணினியும், மாவட்டங்களில் சிறப்பாகச் செயல்பட்ட 17 வாசகர் வட்டங்களுக்கு நூலக ஆர்வலர் விருதாக கேடயம் மற்றும் நற்சான்றிதழ்களையும், மாநில அளவில் அதிக உறுப்பினர்கள் சேர்த்த 4 நூலகங்களுக்கும், மாநில அளவில் அதிக புரவலர்கள் சேர்த்த 4 நூலகங்களுக்கும், மாநில அளவில் அதிக நன்கொடைகள் சேர்த்த 4 நூலகங்களுக்கும் கேடயம் மற்றும் நற்சான்றிதழ்களை வழங்கினார்.

அதன் பின்னர் சென்னை மாவட்டத்தில் வீட்டில் சொந்தமாக நூலகம் அமைத்து சிறப்பாக பராமரித்துவரும் நாவலர் சீ. நாராயணன் அவர்களுக்கு 'சொந்த நூலகங்களுக்கான விருதும்' என மொத்தம் 68 நபர்களுக்கு விருதுகளை வழங்கிச் சிறப்பித்தார்.

இவ்விழாவில் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி விழாப் பேருரையாற்றியதாவது:-

முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படியும், தமிழ்நாடு துணை முதலைமைச்சர் ஆலோசனைப்படியும், நூலகர்களுக்கு "டாக்டர்.எஸ்.ஆர். அரங்கநாதன் விருதும் மற்றும் சென்னை பன்னாட்டு புத்தகத் திருவிழா (CIBF) 2025ஐ அறிமுகம் செய்தும், 38 மாவட்ட நூலகர்களுக்கு கையடக்க கணினியும், மாவட்டங்களில் சிறப்பக செயல்பட்ட 17 வாசகர் வட்டங்களுக்கு நூலக ஆர்வலர் விருதாக கேடயம் மற்றும் நற்சான்றிதழ்களையும், மாநில அளவில் அதிக உறுப்பினர்கள் சேர்த்த 4 நூலகங்களுக்கும், மாநில அளவில் அதிக புரவலர்கள் சேர்த்த 4 நூலகங்களுக்கும், மாநில அளவில் அதிக நன்கொடைகள் சேர்த்த 4 நூலகங்களுக்கும் கேடயம் மற்றும் நற்சான்றிதழ்களையும், சொந்தமாக நூலகம் அமைத்து சிறப்பாக பராமரித்துவரும் நூலகருக்கு விருதும் வழங்கியதில் மகிழ்ச்சியடைகிறேன்.

இந்தியாவிலேயே முதல் முறையாக ஒரு மாநில அரசினால் ஒரு பன்னாட்டு புத்தகத் திருவிழாவை மிகச்சிறந்த முறையில் நடத்திக்காட்ட முடியும் என்ற சாதனையை முதலமைச்சர் தலைமையிலான அரசு படைத்துள்ளது.

2023-ஆம் ஆண்டு நடத்தப்பட்ட முதலாவது சென்னை பன்னாட்டு புத்தகத் திருவிழாவில் 24 நாடுகள் பங்கேற்று 365 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டன. அதனைத் தொடர்ந்து, 2024-ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட சென்னை பன்னாட்டு புத்தகத் திருவிழாவில், குறிப்பிடத்தக்க வகையில், முந்தைய ஆண்டை விட சிறப்பான முறையில் 40 நாடுகள் பங்கேற்று 752 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டன. 2025-ஆம் ஆண்டு நடைபெற உள்ள பன்னாட்டு புத்தகத் திருவிழாவில் 50 நாடுகளில் 1000 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் செய்திடத் திட்டமிட்டுள்ளோம்.

பன்னாட்டு மொழிகளில் மொழி பெயர்ப்பு!

தமிழ் மொழியிலிருந்து உலக மொழிகளுக்கு மொழி பெயர்க்கப்பட்ட நூலகள், பன்னாட்டு மொழிகளான அரபி, ஆர்மீனியம், சீனம், ஜார்ஜியன், கொரியன், மலாய், சுவாஹிலி, அல்பேனியன், ஆங்கிலம், பிரெஞ்சு, ஜெர்மன், இத்தாலியன், நேபாளி, மாசிடோனியன், பாரசீகம், சிங்களம், ஸ்பானிஷ், துருக்கி, இந்திய மொழிகளான அசாமி, வங்காளம், போஜ்புரி, குஜராத்தி, ஹிந்தி, கன்னடம், மைதிலி, மலையாளம், மராத்தி, ஒடியா, பஞ்சாபி, ராஜஸ்தானி, தெலுங்கு, உருது ஆகிய மொழிகளில் நூல்கள் மொழிபெயர்ப்பு செய்யப்பட்டுள்ளது.

மேலும், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் கழகத்தின் மூலம் உலக மொழிகளிலிருந்து தமிழ் மொழிக்கு மொழி பெயர்க்கப்பட்ட 160 புத்தகங்கள் துருக்கி, பாரசீகம், இத்தாலி, ஸ்பானிஷ், பல்கேரியன், செர்பியன், ஆங்கிலம், ரஷியன், கிரேக்கம், போர்த்துகீசி மற்றும் இந்தி போன்ற பன்னாட்டு மொழியிலிருந்து தமிழ் மொழிக்கு மொழிபெயர்ப்பு செய்யப்பட்டு வருகின்றன. முதலமைச்சர் அவர்கள் இதற்காக ரூபாய் 3 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளார்கள்.

பன்னாட்டு குழந்தைகள் புத்தகக் காட்சி!

சென்னை பன்னாட்டு புத்தகத் திருவிழாவில் கலந்து கொண்டு புரிந்துணர்வு ஒப்பந்தங்களை மேற்கொள்வதற்கு வெளிநாடுகளைச் சேர்ந்த அரசு நிறுவனங்கள், பதிப்பாளர்கள் மற்றும் மொழிபெயர்ப்பு வல்லுநர்களை நேரில் சந்தித்து அழைப்பு விடுக்கும் விதமாக புதுடெல்லி உலக புத்தகத் திருவிழா மற்றும் ஜெர்மனி நாட்டிலுள்ள ஃபிராங்க்பர்ட் நகரில் நடைபெறும் சர்வதேச புத்தகத் திருவிழா ஆகியவற்றில் தமிழ்நாடு அரசின் சார்பின் அரங்குகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

மேலும், இத்தாலியில் நடைபெறும் பொலோனியா பன்னாட்டு குழந்தைகள் புத்தகக்கண்காட்சி, ஐக்கிய அரபு அமீரகத்தில் நடைபெறும் ஷார்ஜா பன்னாட்டு புத்தகத் திருவிழா, மலேசியாவில் நடைபெறும் கோலாலம்பூர் பன்னாட்டு புத்தகத் திருவிழா, இலங்கையில் நடைபெறும் கொழும்பு பன்னாட்டு புத்தகக்கண்காட்சி மற்றும் இந்தோனேசியா பன்னாட்டுப் புத்தகத் திருவிழா ஆகியவற்றில் தமிழ்நாடு அரசின் சார்பில் பிரதிநிதிகள் கலந்து கொண்டு புத்தகப் பதிப்புரிமை பரிமாற்றம் மற்றும் சென்னை பன்னாட்டு புத்தகத் திருவிழாவைப் பிரபலப்படுத்தியும் வருகின்றனர்.

கடந்த இரண்டு ஆண்டுகளாக வெற்றிகரமாக நடைபெற்று வரும் சென்னைப் பன்னாட்டுப் புத்தகத் திருவிழா வருகிற 2025-ஆம் ஆண்டில் ஜனவரி 16 முதல் 18 தேதி வரையில் சென்னை வர்த்தக மையத்தில் நடத்தப்படவுள்ளது என்பதையும், மதிப்புறு விருந்தினராக (Guest of Honour) இத்தாலியைச் சேர்ந்த பொலோனியா பன்னாட்டுக் குழந்தைகள் புத்தகக் கண்காட்சி நிறுவனம் கலந்து கொள்ளும் என்பதையும் இந்த தருணத்தில் மகிழ்வுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்நாடு அரசு பொது நூலகங்களை நாடிவரும் வாசகர்கள் மற்றும் போட்டித் தேர்வு மாணவர்கள் பயன்பெறும் வகையில் 32 மாவட்ட மைய நூலகங்கள், 314 முழு நேர கிளை நூலகங்கள் மற்றும் 1612 கிளை நூலகங்கள் என மொத்தம் 1958 நூலகங்களில் WiFi வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேலும், அரசு அறிவிப்பான மாவட்ட மைய நூலகங்கள் மற்றும் முழுநேர கிளை நூலகங்கள் புதுப்பித்தல் தொடர்பாக 29 மாவட்ட மைய நூலகங்கள் மற்றும் 72 முழு நேர கிளை நூலகங்களை ரூ.24 கோடி செலவில் புதுப்பிக்கப்பட்டு வருகிறது. பொது நூலகங்களிலேயே முதன் முறையாக 108 நூலகங்களில் VR (Virtual Reality) சாதனங்கள் வழங்கப்பட்டு மாணவர்களுக்கு உயர் தொழில்நுட்ப சேவை வழங்கப்பட்டு வருகிறது. சமுதாயத்தை அறிவார்ந்த நிலைக்கு உயர்த்துவதில், புத்தக வாசிப்பு முக்கியப் பங்கு வகிக்கிறது, எனவே சென்னை புத்தகக்காட்சி போன்று தமிழ் நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் புத்தகக் காட்சிகள் நடத்தப்பட்டு வருகிறது. இதில் கடந்த இரண்டு ஆண்டுகளில் அனைத்து மாவட்டங்களில் நடைபெற்ற புத்தகக் காட்சிகளில் 86,44,190 பொது மக்கள் பார்வையிட்டு, அதில் ரூ.69.20 கோடி மதிப்பில் 81,44,525 நூல்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

இலக்கியச் செழுமைமிக்க தமிழ் மொழியின் இலக்கிய மரபுகளைக் கொண்டாடும் வகையில், ஆண்டுக்கு நான்கு திருவிழாக்கள் நடத்த உத்தேசிக்கப்பட்டு, தமிழகத்தில் நதி நாகரிக மரபுகளின் அடிப்படையில் வைகை, காவேரி, பொருநை மற்றும் சிறுவாணி ஆகிய நான்கு இலக்கியத் திருவிழாக்கள் முறையே மதுரை, தஞ்சாவூர், கோயம்புத்தூர் மற்றும் திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களிலும் மற்றும் சென்னை இலக்கியத் திருவிழா நடத்த ரூ.1.55 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு 2023 ஆம் ஆண்டு சிறப்பாக நடபெற்றது. இவ்வாண்டும் மேற்படி இலக்கியத் திருவிழாக்கள் நடத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இளைஞர்களின் படைப்பாற்றலை ஊக்குவிக்கும் வகையில், இளைஞர் இலக்கியத் திருவிழா நடத்த ரூ.30 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அண்ணா நூற்றாண்டு நூலகத்தின் பயன்பாட்டினை தொடர்ந்து, மதுரையில் கலைஞர் நூற்றாண்டு நூலகம் 2023-ஆம் ஆண்டு ஜூலை மாதம் 15-ஆம் நாள் முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. இந்நூலகம் ரூ.218.19 கோடி செலவில் கட்டப்பட்டது. 3.8 ஏக்கர் இடத்தில் அடித்தளம், தரைத்தளம் மற்றும் ஆறு தளங்களுடன் இயங்கி வருகிறது. இந்நூலகம் ஆரம்பிக்கப்பட்ட நாள் முதல் தற்போது வரை 12,61,273 பொதுமக்கள் மற்றும் வாசகர்கள் என அனைத்துத் தரப்பினரும் நூலகத்தைப் பயன்படுத்தி உள்ளனர்.

புதியதாகத் தொடங்கப்பட்டுள்ள தென்காசி, திருப்பத்தூர், இராணிப்பேட்டை, மற்றும் காஞ்சிபுரம் ஆகிய மாவட்டங்களில் மாவட்டத்திலும் தலா ரூ.6 கோடி மதிப்பில் மாவட்ட மைய நூலகம் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது. இத்துடன் கள்ளக்குறிச்சி மற்றும் மயிலாடுதுறை ஆகிய மாவட்டங்களில் அரசாணை பெற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், இதனைத் தொடர்ந்து தூத்துக்குடி, ஈரோடு மாவட்டத்தில் புதியதாக மாவட்ட மைய நூலகமும் மற்றும் கிருஷ்ணகிரி மாவட்ட மைய நூலகத்திற்கு கூடுதல் கட்டடம் கட்டுவதற்கான அறிவிப்பும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் வெளியிடப்பட்டு பணிகள் துவக்கப்பட உள்ளது.

நூலகத் தந்தை விருது!

முனைவர் எஸ்.ஆர்.அரங்கநாதன் விருது நூல்களையும் வாசகர்களையும் இணைக்கும் உன்னதமான பணியினை மேற்கொண்டு வரும் நூலகர்களை கௌரவிக்கும் வகையிலும் நூலகர்கள் பணியினை ஊக்குவிக்கும் வகையிலும் ஒவ்வொரு ஆண்டும் விருது வழங்கப்பட்டு வருகிறது. 2011 ஆம் ஆண்டு வரை "நல்நூலகர் விருது" என்ற பெயரில் வழங்கப்பட்டு வந்த விருது இந்திய நூலகத் தந்தை எனப் போற்றப்படும் டாக்டர் எஸ்.ஆர்.அரங்கநாதன் அவர்கள் நூலகத்துறைக்கு ஆற்றிய சீரிய பணியினை நினைவு கூரும் வகையில் "டாக்டர் எஸ்.ஆர். அரங்கநாதன் விருது" என்ற பெயரில் விருது வழங்கி வருகிறது. இவ்வாண்டில், சிறப்பாக சேவையாற்றிய 39 நூலகர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு இவ்விருது வழங்கப்படுகிறது. விருது பெறும் நூலகர்களுக்கு, சிறப்பு சான்றிதழுடன் வெள்ளிப் பதக்கம் மற்றும் ரூ.5000/ பண முடிப்பும் வழங்கப்பட்டது.

சிறந்த நூலகங்களுக்கு நினைவுப் பரிசு நூலக உறுப்பினர்களை அதிகரித்தல், வாசகர்கள் அதிகரித்தல், நூலகப் பயன்பாடு அதிகரித்தல், புரவலர்கள் அதிகரித்தல் போன்ற பணிகள் ஒரு நூலகத்தின் வளர்ச்சியை நிர்ணயிக்கும் என்பதில் ஐயமில்லை. எனவே, பொது நூலக இயக்கத்தை மக்கள் இயக்கமாக மாற்றுவதற்கு துணாக உள்ள நூலகங்களின் பணியினை ஊக்குவிக்கும் வகையில், மாநில அளவில் அதிக உறுப்பினர்கள், புரவலர்கள் சேர்த்த மற்றும் அதிக நன்கொடைகள் (தளவாடங்கள், காலிமனைகள், கட்டடங்கள்) பெற்ற மாவட்ட மைய நூலகம், முழுநேர கிளை நூலகம், கிளை நூலகம் மற்றும் ஊர்ப்புற நூலகங்களுக்கு தலா 4 கேடயங்கள் வீதம் 12 கேடயங்கள் வழங்கப்பட்டது.

இவ்விழாவில் விருது பெற்ற விருதாளர்களுக்கு என் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். வருங்காலங்களில் இவ்விருதை விருது பெறாதவர்களும் பெரும்வகையில் நீங்கள் பணியாற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி பேசினார்.

சென்னை மாநகர நூலக ஆலோசனைக்குழுத் தலைவர் மனுஷபுத்திரன் (எ) எஸ்.அப்துல் ஹமீது, மாநில நூலகக் குழு உறுப்பினர் கோபண்ணா, பொது நூலக இயக்கக இணை இயக்குநர் ச.இளங்கோ சந்திரகுமார், அரசு அலுவலர்கள், நூலகர்கள் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

2024 - 2025 ஆம் ஆண்டில்

சம்பா நெற்பயிர் காப்பீட்டுக்கான காலவரம்பு நீட்டிப்பு!

அரசு அறிவிப்பு!

சென்னை, நவ.21- தமிழ்நாடு விவசாயிகளின் கோரிக்கைக்கிணங்க நடப்பு 2024-2025ஆம் ஆண்டில், சம்பா நெற்பயிர் காப்பீட்டிற்கான காலவரம்பு 30.11.2024 வரை நீட்டிப்பு. இத்திட்டத்தில் இது வரை சம்பா நெற்பயிரை காப்பீடு செய்யாத விவசாயிகள் மட்டும் காப்பீடு செய்ய வேண்டுகோள் விடுக்கப்ப ட்டுள்ளது.

இதுகுறித்து அரசின் செய்திக் குறிப்பு வருமாறு:-

சம்பா/ தாளடி/ பிசானம் நெற்பயிர்க் காப்பீட்டுக்கான கடைசி தேதியை (15.11.2024) நீட்டிக்க வேண்டும் என்ற விவசாயிகள் கோரிக்கைக்கிணங்க, விடுபட்ட விவசாயிகளும் இத்திட்டத்தின் கீழ் பயன்பெற வேண்டும் என்ற நோக்கத்துடன், தமிழ்நாடு அரசால் எடுக்கப்பட்ட தொடர்முயற்சியால் சம்பா/ தாளடி/ பிசானம் நெற்பயிர்க் காப்பீட்டுக்கான கடைசி தேதியை 30.11.2024 வரை நீட்டித்து ஒன்றிய அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது.

எனவே, சனி (23.11.2024) மற்றும் ஞாயிற்று கிழமையில் (24.11.2024) பொது சேவை மையங்கள்செயல்படுவதால் அரியலூர், செங்கல்பட்டு, கடலூர், தருமபுரி, ஈரோடு, கள்ளக்குறிச்சி, காஞ்சிபுரம், கரூர், மதுரை, மயிலாடுதுறை, நாகப்பட்டினம், பெரம்பலூர், புதுக்கோட்டை, இராமநாதபுரம் ,இராணிப்பேட்டை, சேலம், சிவகங்கை, தஞ்சாவூர், தேனி, திருச்சி, திருப்பத்தூர், திருப்பூர், திரு வள்ளூர், திருவண்ணாமலை, திருவாரூர், வேலூர் மற்றும் விழுப்புரம் ஆகிய மாவட்டங்களில் நவம்பர் 30ம் தேதிக்குள் இதுவரை சம்பா நெற்பயிரை காப்பீடு செய்யாத விவசாயிகள் உரிய ஆவணங்களுடன் பதிவு செய்து பயனடையுமாறு தமிழ்நாடு அரசு கேட்டுக் கொள்கிறது. நிர்ணயம் செய்யப்பட்ட காலக்கெடுவுக்குள் ஏற்கெனவே பதிவு செய்த விவசாயிகள் மீண்டும் பதிவு செய்ய வேண்டாம் என்றும் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

இவ்வாறு வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு முதன்மைச் செயலாளர் தெரிவித்துள்ளார்.

கோவை மாவட்ட கழக அலுவலகத்தில் அவைத்தலைவர் புருஷோத்தமன் தலைமையில் நடைபெற்ற செயற்குழு கூட்டத்தில் வடக்கு மாவட்ட கழக செயலாளர் தொ.அ.ரவி கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார் இக்கூட்டத்தில் விவசாய தொழிலாளர் அணி இணைச்செயலாளர் சி.ஆர்.ராமச்சந்திரன் மவட்ட துனைச்செயலாளர்கள் அசோக் ஆறுக்குட்டி , எம்.என்.செந்தில் ஜெயந்தி, பொருளாளர் ரஹ்மான் மாநில விவசாய தொழிலாளர் அணி துனைச்செயலாளர் அருண்குமார் கழக மாநில தீர்மானக்குழு இணைச்செயலாளர் முத்துசாமி தலைமைச் செயற்குழு உறுப்பினர் டி.ஆர். சண்முகசுந்தரம்,சோமு என்கிற சந்தோஷ், அஸ்ரப் அலி ,டி.பி.சுப்பிரமணியம் மாநில சுற்றுச்சூழல் அணி செயலாளர் மணி சுந்தர்.பொதுக்குழு உறுப்பினர் குருபுத்திரன்,வெற்றிச்செல்வன், மற்றும் ஒன்றிய நகர பகுதி பேரூர் வட்ட கழக செயலாளர்கள் அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.